
21 Rajeswari

# ஆத்ம ஜோதி.



சடை-வரதர்.

# பொருளடக்கம்.


| | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | குருவணக்கம் | அருளானந்தசிவம் | 257 |
| 2. | அருணசலத்தீபம் | சடைவரதர் | 258 |
| 3 | தில்லையும் திருநடன தத்துவமும் | ஆசிரியர் | 259 |
| 4 | இசைகூப்பிடும் இறை | க. தி. | 264 |
| 5 | சடைவரதர் | 'முத்து' | 265 |
| 6 | அருட்குரவர் வாழ்த்து | 'சித்தயைன்' | 267 |
| 7 | சடைவரத......நாமாவளி | 'பூமாரி' | 268 |
| 8 | திருவிளங்கும் சிறைச்சாலை | க. வ. மூர்த்தி | 270 |
| 9 | பொறுக்குமணிகள் | சுத்தானந்தர் | 273 |
| 10 | இராமதாசர் சரித்திரம் | 'பக்தி' | 274 |
| 11 | தக்ஷிணகைலாச மான்மியம் | கருணைக்கன் | 276 |
| 12 | அருட்குரவன் அருட்திறன் | பிரேம சுந்தரன் | 277 |
| 13 | தொழுவார் தங்கள் துயர்தீர்ப்பாய் | பிரமசாரி சோமசுந்தரம் | 282 |
| 14 | ராமநாமம் | மகாத்மா | 285 |
| 15 | செய்தித்திரட்டு | | 287 |
| 16 | அன்புநெறி.. ..அழைக்கின்றோம் | 'தமிழ்வேள்' | 288 |


## அட்டைப்படம்.

இம்முறை 'ஆத்மஜோதி'யின் முகப்பை அலங்கரிப்பது ஸ்ரீமத் சடைவரதசுவாமிகளின் முகவிலாசம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழம்பெற்ற தவச்செல்வர்களுள் ஒருவர் இவர். இவரின் வரலாற்றுச்சுருக்கத்தைப் பிறிதோரிடத்திற் காண்க. இ தேமுறையில் நம்நாட்டுக்குப் புண்ணியமும் புகழுந்தேடி வைத்த ஏனையமகான்களின் வரலாறுகளுந் தொடர்ந்துவரும். இத்தொண்டில் உதவிபுரியுமாறு வாசகர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்.


ஓம்

# ஆத்ம ஜோதி

"எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே"—சுத்தானந்தர்.

சோதி 2. விகிர்தி௵ ஆடி மீ. சுடர் 9.


## குருவணக்கம்.

——:-:——

மூவுலகுந் தொழுதேத்துங் கடையில் நாதன்
முளரிமலரடி பணியுங் காசிப்பெம்மான்
தாவிலருள்பெற்ற முருகேச வள்ளல்
தனைப்பரவும் பொன்னம்மாளடிகள் போற்றி
மேவியசீர்ச் சடைவரத நாமத்தோடும்
மேதினியி லெனைப்போலோர் வடிவங்காட்டி
ஓவிலருள்புரிந்து பவக்கடலினின் றென்னை
உயவெடுத்தாளவன் கருணையுரைக் கொணுதே

அன்புருவா யெனையாண்ட சடைவரத
குருவினடி யிணைகள் வாழி
அன்புருவாய் நிறைந்ததிருப் பொன்னம்மா
ளடிவாழி அடியார் வாழி
அன்புருவாங் குருபதத்தைப் பிரியாம
லெந்நாளும் அடியேன் வாழி
அன்புருவா யிவ்வேழை பெற்றதிரு
அருளின்பம் வாழி வாழி. (அருளானந்தசிவம்)

ஸ்ரீ கடையிற்சுவாமிகள் சந்ததியும்
குருபூசை நட்சத்திரங்களும்.

ஸ்ரீ கடையிற் சுவாமிகள் புரட்டாசிமீ பூரட்டாதி
ஸ்ரீ காசிச் சுவாமிகள் கார்த்திகைமீ திருவாதிரை
ஸ்ரீ முருகேசசுவாமிகள் ஆவணிமீ உத்திரம்
ஸ்ரீ தேவி பொன்னம்மா கார்த்திகைமீ உத்திரம்
ஸ்ரீ சடைவரதசுவாமிகள் ஆடிமீ உத்திரம்

# அருணாசலத்தீபம்.

—:-:—

[சடைவரதர்].

சாதிமத பேதமாம் அழுக்கற்ற முதியோர்
சமூகத் திலங்கு தீபம்
சதுர்மறையும் கலையாறு தொண்ணூற்றாறு
தத்துவமெல்லாம் நின்றதீபம்
சோதிமலைமீதிற் சுயஞ்சோதியாய் நின்று
சோதியத்தனைக்குந் தீபம்
சும்மாயிருக்கும் சுகங்கொண்ட மௌனியொடு
சும்மா இருக்கும் தீபம்
நீதிபலபேசி மதவாதமிடு மடையரது
நெஞ்சைப் பிளக்குந் தீபம்
நின்றநிலை நின்றட்ட திக்கெலாம் இரவுபகல்
நிர்த்தமிடு நெடிய தீபம்
மாதுமலை மங்கையொடு ஆதிமலைமீதில்
வளர்மணி மந்த்ர தீபசுடராம்
மண்ணோர்மலர்க்கண் மால் விண்ணோ ரயன்காணா
அண்ணாமலைத் தீபமே
சிவசிவ அருணாசலத்தீபமே.

பிஞ்சுமதி நதியை முடிமேல் பூண்டதீபமாம்
பணிமேலணிந்த தீபம்
பேசரியமறைநான்கும் பேசுமொருதீபம்
பெண்கொடி மணந்த தீபம்
அஞ்செழுத்தாய்ப் பஞ்சபூதமாய் என்னுடற்
காதார மான தீபம்
அகில புவனங்களும் திக்குத் திகாந்தமும்
அங்கிங் கெனாததீபம்
தஞ்சமென்றிடும் அடியார் நெஞ்சைத் திருத்தியே
தன்னருள் காட்டு தீபம்
தந்தைதாய் குருதெய்வம் தமர் தாரம் மகவுமாய்
தானுமாய் ஆடு தீபம்
கஞ்சமலர்ச் சோலைகுளிர் தீம்புனல் நிரைச்சாலை
கனகமலை மீதிலென்றும் [ணா
மண்ணோர் மலர்க் கண்மால் விண்ணோர் அயன்கா
அண்ணாமலைத் தீபமே
சிவசிவ அருணாசலத் தீபமே.

# தில்லையும் திருநடன தத்துவமும்.

[ஆசிரியர்]

நடராச உபாசகர்கட்கு மிகவும் விசேடித்த தினங்கள் வருஷத்தில் இரண்டு. ஒன்று தட்சிணாயனத்தின் இறுதியில் வரும் மார்கழித் திருவாதிரை; மற்றையது உத்தராயணத்தின் இறுதியில் வரும் ஆனி உத்தரம். முந்தியது விடியற்கால ஆருத்ரா தரிசனத்தையும், பிந்தியது மாலைக்கால அபிஷேக ஆராதனையையும் குறித்துள்ளன. நமது ஒரு வருஷமானது தேவர்கட்கு ஒருநாளாகுமெனக்கூறும் புராணக்கதையில் மிகவும் நுட்பமான வானூல் கணித சாஸ்திரம் அடங்கியுள்ளது.

"ஆதிஅருணாசலப்பேர்அற்புதலிங்கத்துருக்கொள்
ஆதிநான்மார்கழியில்ஆதிரைஅச்—சோதியெழும்
ஈசனைமால்முன்னமரர்ஏத்திவழிபட்டநாள்
மாசிசிவராத்திரியா மற்று."

இந்த வெண்பாவில் விளக்கப்பெற்ற லிங்கரூபத்தோற்றம் மகேசுர வடிவங்கள் இருபத்தைந்தனுள் முதலாவதான லிங்கோற்பவமூர்த்தியைக் குறிப்பதாகும். மார்கழித் திருவாதிரை வழிபாடு அதே தொடர்பில் ஆரம்பித்தது. முதல் முதலாகத் தேவர்கள் பெற்ற காலைத் தரிசனத்தை இது விளக்கிநிற்க, அன்று மாலை அந்த லிங்கத்திற்கு அவர்கள் செய்த அபிஷேக ஆராதனையை மக்களுக்கு நினைவூட்டுவது ஆனித்திருமஞ்சனமென அழைக்கப்படும் உத்தரத்திருவிழா. சிவராத்திரியும் கார்த்திகைத்தீபக்காட்சியும் இவ்விரண்டிற்கும் முந்தி நடந்த வைபவங்களாகும். இந்நான்கிற்கும் இடையேயுள்ள நாட்களை நாழிகைகளாகக்கொண்டு கணித்துப் பார்த்தால் அரிய பெரிய உண்மைகள் புலனாகும். வேறு எந்த சிவஸ்தலங்களுக்குமிடையே காணமுடியாத அத்யாத்மத் தொடர்பு திருவண்ணாமலைக்கும் சிதம்பரத்திற்குமிடையே உண்டென்பதும் தென்படும். மணிவாசகரால் திருவண்ணாமலையில் இயற்றப்பட்ட திருவெம்பாவை சிதம்பரத்திலேயே முதலிடம்பெற்றிருப்பது அதற்கு ஓர் அகச்சான்றாகும்.

சிதம்பரத்தின் தொன்மை சரித்திர காலத்தைத் தாண்டிநிற்பது. குகைக்கோயில்கள் கற்கோயில்கள் தோன்றுவதற்குப்

பல்லாயிரம் ஆண்டுகட்குமுன்னரேயே மரத்தால் கட்டப்பட்ட சிற்றம்பலம் பொன்னம்பலம் இருந்தனவாம். காசியில் இறக்க முத்தி, கயிலையில் பிறக்கமுத்தி, அருணையை நினைக்கமுத்தி, தில்லையைத் தரிசிக்க முத்தி என்கின்றது ஓர் பழைய வடமொழிச் சுலோகம். மறையின் சிகரமான உபநிடதங்களும் சாந்தோக்கியம் மைத்திரேயம் இரண்டிலும் சிதம்பரத்தின் தத்துவமும் பழமையும் இடம்பெற்றுள்ளன. 'விராட் புருஷவடிவில் விளங்கும் உலகிற்கு சிதம்பரம் இதயம்' என்கின்றன வேறு பல நூல்கள். இலங்கையை நோக்கிச்செல்லும் இடைநாடிக்கும், இமயத்தை நோக்கிச்செல்லும் பிங்கல நாடிக்கும் மத்தியிலுள்ள சுழிமுனைநாடி நேரே நோக்கிச் செல்லுமிடமே அம்பலம் என்கிறார்கள் திருமூலர்போன்ற யோகிகள். இவ்வாறு பலவிதத்தில் பெருமைபெற்ற சிதம்பரம் பூலோக கைலாயமெனப் புகழப் படுகின்றது. இத்தலத்திற்கு தில்லை, திருச்சிற்றம்பலம், கோயில், புலியூர். மன்று, பொது, கனகாபுரி, செம்பொனம்பலம், பெரும்பற்றபுலியூர் முதலாய அநேகம் மறுபெயர்கள் உள. திருமூலர், மாணிக்கவாசகர் காலந்தொட்டு இருபதாம் நூற்றாண்டில் சுத்தானந்தர் வரையில் தென்னாட்டில் தோன்றிய பக்தர்கள், யோகிகள், சித்தர்களெல்லாம் சிதம்பரதரிசனம் பெற்றுப் பாமாலைகள் சாற்றியுள்ளனர். உலகின் வேறு எந்த ஸ்தலத்திற்காவது இவ்வளவு தொகையான தோத்திரங்களைக் காணமுடியாது.

சிதம்பரத்தில் உள்ள சபைகள் ஐந்து. அவையாவன சிற்சபை கனகசபை, தேவசபை, நிருத்தசபை, ராஜசபை. இவற்றுள் முதல் மூன்றும் முறையே சிற்றம்பலம், பொன்னம்பலம், பேரம்பலம் என அழைக்கப்படும். சிற்றம்பலத்தை சிவாயநம என்ற பஞ்சாக்ஷரம் எழுதப்பெற்ற பொன்னோடுகளால் வேய்ந்தவன் முதற் பராந்தகன். அதனைப் பின்பற்றி பேரம்பலத்தையும் பொன்மயமாக்கியவன் அனபாயன். கனகசபைக்குப் பொன்வேய்ந்தவன் மணவிற்கூத்தன் காலிங்கன். உற்சவமூர்த்திகள் எழுந்தருளியிருக்கும் சபையே பேரம்பலம். திருவம்பலச் சக்கரம் மந்திரரூபமாய் அமைக்கப்பட்டுள்ள சிதம்பர இரகசியம் சிற்சபையில் நடராஜப்பெருமானின் வலது புறத்திலுள்ளது. இங்கே உள்ளதிரை வெளியே கறுப்பாகவும் உள்ளே சிவப்பாகவும் இருப்பதானது மறைப்புச்சக்தியே அருட்சக்தியாகமாறி ஆன்மாக்களை உய்விக்



கின்றதென்பதை அருமையாக விளக்குகின்றது. சிதம்பரத்திலுள்ள நாற்றிசைக் கோபுரங்கள் சைவத்தின் நான்கு பாதங்களைக் குறித்து நிற்கும் அற்புத தத்துவமும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய முக்கிய விஷயமாகும். கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, நான்கும் முறையே மாணிக்கர், சம்பந்தர், அப்பர், சுந்தரர் விளக்கிய சன்மார்க்கம், சற்புத்திரமார்க்கம், தாசமார்க்கம், சகமார்க்கம் (ஞானம், கிரியை, சரியை, யோகம்) நான்கினையும் அறிவுறுத்தி நிற்கின்றன.

இப்போது அங்கே நாம் காணும் ஆலயங்கள், மண்டபங்கள் கோபுரங்கள் எல்லாம் ஒரே காலத்தில் ஒருவர் இருவரால் கட்டப்பட்டனவல்ல. 1500 வருஷங்களாக நடந்தேறிய திருப்பணிகள் ஒருங்குசேர்ந்தே நமக்கு இன்று காட்சிதருகின்றன. சோழதேச பாண்டியர்களும், பல்லவர்களும் விஜயநகரராயர்களும், நாயக்கர்களும், சித்திரப்பணியில் பங்கெடுத்துப் புண்ணியந் தேடியுள்ளனர். இவர்களுள் சோழமன்னர்களின் சிவப்பணியே சிறந்ததாகும். தஞ்சாவூரில் இன்றும் புகழுடன் விளங்கும் பெரிய கோயிலைக் கட்டுவித்த ராஜ ராஜசோழனுக்கே சேர்ந்ததாகும். சிதம்பரம் நடராஜர் சந்நிதியை பெரிதாக்கிப் புதிதாக்கிய புண்ணியம். சைவசமயாசாரியர்களதும் வைஷ்ணவ ஆழ்வார்களதும் பக்திரசம் ததும்பும் தெய்வீகக்காதல்கொண்ட பாடல்களின் பயனால் நாடெங்கும் பரவிய தெய்வபக்தி மக்களின் உள்ளத்தில் ஒரு புது உணர்ச்சியைக் கிழப்பியது சோழ மன்னர்களின்காலத்திலாகும். இந்த மதவுணர்ச்சி சிறப்புற்றபோதுதான் தென்னாட்டில் ஓவியமும் சிற்பமும் உன்னதநிலையை அடைந்தன. சிவா பிம்பங்களாகவும் அபிஷேகத்திற்குரிய சிறு உலோக பிம்பங்களாகவும் இருந்த மூர்த்திகள் பெரிய திருவிழாக்களுக்கும் ஊர்வலங்களுக்கும் பொருந்தும் முறையில், தாமிரத்திலும் பின்னர் பஞ்சலோகங்களிலும், சித்திரக்கலைகளைப்போல் சீர்மை பெற்ற வேலைப்பாடுள்ள உற்சவமூர்த்திகளாய் மாறின. அக்காலத்தில் சிற்பிகள் ஒவ்வொரு விக்கிரகத்தையும் பக்திவினயத்துடனும், இயம நியமங்களுடனும் மந்திரசக்தியுடனும், வார்த்தெடுத்தார்கள். அந்த விக்கிரகங்கள் நாடெங்கும் ஆலயங்களில் ஒழுக்க சீலர்களான குருக்கள் மாரால் மந்திர தந்திரங்கள்மூலம் பிராண பிரதிஷ்டையுடன் ஸ்தாபன

மாகி, மன்னர்களின் ஆதரவில் மக்களால் ஒழுங்காகப் பூஜிக்கப்பட்டன. நாடு செழிப்புற்று மக்கள் நல்வாழ்வு பெற்றனர்.

இவ்விதம் தோன்றிய விக்கிரகங்களில் தலைசிறந்து விளங்குவது நடராஜ வடிவம். இதிலடங்கியுள்ள அழகிய தத்துவங்களை இனிச்சிறிது ஆராய்வோம். சிவகாமசுந்தரி பார்த்துக்களிக்க நடராசப்பெருமான் நடிக்கும் ஆனந்தத்தாண்டவத்தையே எடுத்துக்கொள்வோம். அப்பனும் அம்மையும் கூடிய இந்தத் தோற்றத்தில் அவர்கள் ஒருவரை ஒருவர் காதலுடன் நோக்குங்காட்சி முதலில் தென்படுகின்றது. இருவரது முகவிலாசங்களில் ஒளிரும் புன்சிரிப்பு அவர்களின் கண்மாத்திரமன்றிக் கருத்தும் ஒன்றியிருப்பதற்கு அறிகுறியாக மிளிர, ஆனந்த நடனம் நடக்கின்றது. இந்த இன்பக்காட்சியைத் தமது தூய மனக் கண்ணால் காணும் பாக்கியம் பெற்ற சேக்கிழார் பெருமான்,

அத்திருப் பதியில் நம்மை ஆளுடை
மெய்த் தவக்கொடி காண விருப்புடன்
நித்தன் நீடிய அம்பலத்தாடும் மற்
றித்திறம் பெறலாந் திசை எத்திசை?

என்று ஒருகேள்விபோடுகிறார். அதாவது, நம்மை ஆட்கொள்ளும் நாயகியாரான சிவகாமிசுந்தரி அம்மையார் விருப்புடன் என்றுங்காண நடராசப்பெருமான் ஆடுங்காட்சியை என்றுமுள்ள திருவம்பலத்தை விட வேறு எந்தத்திசை பெற்றுப் பெருமையடைந்துள்ளது என்கிறார். 'விருப்புடன்' என்ற பதம் காண்பவர்க்கு மாத்திரமன்றி ஆடுபவர்க்கும் பொருந்தியுள்ள அழகை நோக்குக. அப்பனைப்போலவே அம்மையும் வேண்டுதல் வேண்டாமையற்றவர். அப்படியிருந்தும், அவர்கட்கு விருப்பேன், கூத்தேன் என்ற கேள்விகள் எழலாம். இவற்றை எதிர்பார்த்துப் போலும் 'நம்மையாளுடை' என முதலில் கூறி, அவர்களின் விருப்பு தம்பொருட்டன்றி உயிர்கள் உய்யவேண்டுமென்று உலகின்மேல் வைத்தகருணை காரணமானதெனக் குறித்தனர் சேக்கிழார். இறைவன் விருப்புடன் ஆடும் ஆனந்தத்தாண்டவத்தை தங்கள் ஊனக்கண்ணால் காண்பதற்கு மன்னுயிர்கள் வலிமையில்லாதவர்கள். ஆதலின் சிவகாமி அம்மையார் தாமே அதனைக்கண்டு, அக்காட்சியின் பயனை உயிர்களுக்கு ஊட்டுவதென்பதாம். ஒப்பற்ற



இக்கருணைச் செயலை குமரகுருபரர் தாம் இயற்றிய சிதம்பரமும்மணிக்கோவையில் அழகாய் விளக்கியுள்ளார். ஒரு தாயானவர் தன் குழந்தையின் குடர் மருந்தைச் சீரணிக்கும் சக்தியற்றதென உணர்ந்து தானே அம்மருந்தை ஊட்கொண்டு அதன் பயனைத் தனது முலைப்பாலின் வழியே குழந்தை பெறும்படிசெய்வதுபோல அம்பிகை நடராஜமூர்த்தியின் திருநடனத்தை தானே விரும்பிக் கண்டு அதன் பலனை உயிர்கள் நுகரவைப்பன் என்பதாம்.

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் உயிர்கள் உய்யும்பொருட்டுச் செய்தருளும் இத்திருக்கூத்தில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களும் அடங்கியுள்ளன. இவற்றின் விரிவான விளக்கங்களை திருமூலர் திருமந்திரத்திலும், நால்வர் பாடல்களிலும், சிவாகமங்களிலும், சித்தாந்த சாஸ்திரங்களிலும், பெரியபுராணத்திலும் பரக்கக்காணலாம். தோற்றப் பொருள்கள் அனைத்திற்கும் ஒலியே ஆதாரமாயிருப்பதால் உயர நீட்டிய வலக்கரத்திலேந்திய டமருகம் சிருஷ்டித் தொழிலைக்குறிக்கின்றது; 'அஞ்சாதீர்கள்' எனுங்குறிப்பைக் காட்டும் மற்றவலக்கரம் காத்தல் தொழிலைச் செய்கின்றது. உயர்த்திய இடது கரத்திலேந்திய அக்கினி சங்காரத் தொழிலைச் செய்கின்றது. முயலகனை ஆணவத்தை மிதித்து நிற்கும் வலப்பாதம் மறைத்தல் தொழிலைச் செய்கின்றது. தூக்கிய திருவடி முத்தியை அருளுகின்றது. கீழ்நோக்கிய இடதுகரமானது குஞ்சிதபாதநிழலில் அமர்ந்து ஆனந்தத்தை அனுபவியுங்கள் என ஆன்மகோடிகளை அழைக்கும் முறையில் அமைந்துள்ளது.

மக்கள் கண்ணினைப்பெற்ற பயன் இந்த ஆனந்த நடனத்தைக் காண்பதேயாம். 'தில்லையம்பலத்தாடுகின்ற அத்தா உன்னுடல் காண்பான் அடியனேன் வந்தவாறே' எனத் தம்மை நடராஜப் பெருமானுக்கு அறிமுகப் படுத்திக்கொண்ட அப்பர் சுவாமிகள், அந்த ஆனந்தக்காட்சி பெற்றதும் அம்பலக்கூத்தனைத் தினைத்தனைப் பொழுதும் தம்மால் மறந்துய்ய முடியாதெனச் சத்தியங்கூறி, தாம் பெற்ற இன்பம் இத்தரணியும் பெறவேண்டுமென்ற கருணையால் உந்தப்பட்டு 'பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' என உலகமக்களுக்கு அறிவுறுத்தி, அவர்களை 'அயலவர் சிரிச்சுற்றுப்பல பேசப்படா முனந் திருச் சிற்றம்பலஞ் சென்றடைந்துய்மினே' என அழைக்கின்றார்

"குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்
வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மானிலத்தே"

என்பது அவரின் அநுபவ முதிர்ச்சியில் கனிந்த அரிய தேவாரம். இதே கருத்தில் உள்ளந் தோய்ந்த சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தின் பாயிரத்தில் மலர் சிலம்படியை வாழ்த்தி வணங்கியதன் பயன் கூறுமுகத்தால், காப்புச் செய்யுளுக்கு அடுத்தபடியாகவே,

"ஊனடைந்த உடம்பின் பிறவியே
தானடைந்த உறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்ப்பொழிற் றில்லையுள்
மாநடஞ் செய்வரதற் பொற்றொழ"

என்கிறார். ஆதலால் நாம் அனைவரும் நடராஜப் பெருமானின் திருவுருவதத்துவத்தை உணர்ந்து, 'அதின் சிறப்பினை நினைந்து வழிபட்டு மீட்டிங்குவந்து வினைப்பிறவி சேராநிலையை எய்துவோமாக.

"வாழி திருமன்றங் கண்டமலர்க் கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்டவார் செவிகள்
வாழி யவனை வணங்கு முடிச்சென்னி
வாழி யவன் சீர்பாடும் வாய்."

---

## இசை கூப்பிடும் இறை.

[க. தி]

இசையெலா மழைக்கும் இன்பமே அன்பே
ஈறிலாப் பதமெலாங் கடந்தோய்
நிசமிலா உலகை நிகழ்த்துவா யெனினும்
நின்னிலை யறியயார் வல்லார்
விசுவமாமாயை விதமெலாந் தேர்ந்து
விமலமார் நிலையினை மேவி
பசுநிலை யிழந்த பக்குவரறிவார்
பாவியே னறிந்திடப் படுமோ.



# சடைவரதர்.

"முத்து"

எனது ஊர் ஏழாலை எனக்கு அப்போ வயது ஐந்து அல்லது
ஆறு இருக்கும். எங்களூரில் உள்ளாரின் நாவில் வண்ணாரச்சாமி
சரவணைச்சாமி என்ற பெயர்களை எந்தநேரமும் அடிபட்டதைக்
காணலாம். ஒருநாள் எங்களூர்ச் சுடலைக்குப்போக நேர்ந்தது.
அங்கு ஓர் சமாதியுள் வெளிச்சமொன்று எரிந்தது. கூடவந்தவரி
டம் இது என்னவெனக்கேட்டேன். இதுதான் சரவணைச்சாமி
யாரின் சமாதி என்றார்.

எங்களூரிலே ஒரு சாமியார் சமாதி ஆவதென்றால் அவரைப்
பற்றி அறியவேண்டுமென ஆவல் எழுந்தது. கூடவந்தவருக்குப்
பெயர்தெரியுமே தவிர வரலாறு தெரியாது. எங்களூரில் சடைவ
ரதசுவாமிகளின் சிஷ்யர்களே இருந்திருக்கிறார்கள். இன்றும்
இருக்கிறார்கள். அவர்களிடம் ஏதாவது அறிந்துகொள்ளலாமோ
என்பதைத் திருவருள் கூட்டிவைக்கவில்லை.

சுவாமியின் சிஷ்யர்களுள் ஒருவரான "அருளானந்தசிவம்"
பொன்னையா என்பவர் இப்போ காலமாகிவிட்டார். அவர் நினை
த்திருந்தால் சுவாமியின் சரிதையை ஒரு பாரதமாக எழுதியிருக்
கலாம். சுவாமியின் சிஷ்யர்கள் பெரும் பகுதியோருக்குக் கடித
மெழுதினோம். பதில் பார்த்துப் பார்த்து ஏமாந்தோம். சிலரை
நேரில்சென்று பார்த்தோம். சுவாமியின் குறிப்புகள் சில தம்பி
டம் இருப்பதாகவும் தேடி எடுத்து அனுப்புவதாகவும் கூறினர்.
சிலர் ஆலோசித்து எழுதி அனுப்புவதாகவும் கூறினர். இன்று
வரை எவரும் அனுப்பினார்களில்லை. சுவாமிகளின் சிஷ்யரான
சர்மா ஐயா அவர்கள்மாத்திரம் தப்மாலியன்ற உதவி சுவாமிக
ளைப்பற்றித் தேடித்தந்தார்கள் ஐயா அவர்களுக்கு குருவின்
திருவருளும் அன்பர்களின் ஆசியும் உரித்தாகுக.

ஒருநாள் உசன்மடத்து அப்மையார், சுவாமியைப்பற்றி
ஞாபகத்திலிருந்து சொன்னவற்றைச் சுருக்கமாகத்தருகிறோம்.
சுவாமிகளைப்பற்றிய விரிவான வரலாறு தெரிந்தோர் எழுதிஅனுப்

பினால் சுவாமியின் சரிதமே ஒரு புத்தகமாக வெளிவரலாம். இத்தொண்டை யாராவதொரு சிஷ்யருக்குப் பணிக்கும்படி குருநாதன் திருவடியைப் பரவுவோமாக

யாழ்ப்பாணத்தில் அச்சுவேலி என்றொரு கிராமம். செல்வச்சந்நிதி கோயில் அதன் அயலிலே இருப்பதால் கிராமத்து மக்கள் யாவரும் முருகன் மீது இடையறாத பக்திபூண்டவர். அவ்வூரில் வண்ணாரவகுப்பைச்சேர்ந்த சுப்பையா என்றொருவர் இருந்தார். அவருக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு சரவணை என்று பெயரிட்டனர் பெற்றோர்.

இச்சரவணக்குழந்தை இளமையிலேயே பார்ப்போர் மனதைக்கவரும் அழகனாய் விளங்கினான். நீராவியடி என்ற ஊரிலுள்ள வேளாண் மரபு அம்மையார் இச்சரவணக் குழந்தையைக் கண்டு தான் இக்குழந்தையை வளர்க்கப் பிரியப்படுவதாகக் கூறினார். சுப்பையாவும் பெரியவீட்டில் தன் குழந்தை வளர்வதால் பெருமையுண்டுதானே என நினைத்து சரவணை, அம்மையார் வீட்டில் இருக்கச்சம்மதித்தார்.

இந்தச் சரவணக் குழந்தை வளர்ந்துவரும் வீட்டிற்கு அயலிலேதான் கடையிற்சாமியாரின் சிஷ்யர் ஒருவரின் வீடு இருந்தது. ஓர்முறை அவ்வீட்டில் கடையிற்சாமியார் ஒன்பது நாட்கள் சுகவீனங்காரணமாகப் படுத்த படுக்கையாக இருந்தார். அப்போ சரவணைக்கு வயது எட்டு ஆகிறது அவ்வூர்க்குழந்தைகளுக்கெல்லாம்சாமியார்மேல் ஓர் தனிப்பட்ட பிரியம். 9ம் நாள் குழந்தைகளெல்லாம் சாமியாரைப் பார்க்கச்சென்றனர். சரவணையும் கூடச்சென்றார். சுவாமியார் சுகவீனமாய் இருந்தபடியினால் குழந்தைகள் சுவாமியாருக்குக்கிட்டப்போக மறுத்தனர். சரவணைமாத்திரம் பயமில்லாமல் சுவாமிக்குக்கிட்ட சென்றார். உடனே சுவாமியார் சரவணையை எட்டிப்பிடித்துக் கட்டி அணைத்து உச்சிமோந்து தமது தலையிலுள்ள தொப்பியைக் கழற்றிச் சரவணையின் தலையில் அணிந்து செல்லவிடுத்தார்.

வேளாண் அம்மையாருக்குக் குழந்தைமேல் அன்பு இருந்தாலும் சாதி அபிமானம் முற்றாக அவரை விட்டுநீங்கியதாகத் தெரியவில்லை. அவ்வம்மையார் தான் திண்ணையிலும் சரவணையை



வீட்டு நடையிலும் படுக்கவிடுதல் வழக்கம். ஒருநாள் அம்மையார் ஒருகனவு கண்டார். ஒரு சந்நியாசியார்வந்து நீ இச்சரவணையை யாரென்று நினைத்தாய்! இவன் எனது அடியானல்லவா? இவன் பண்டாரப்பிள்ளையெனச் சொல்லி மறைந்தார். அன்று தொடக்கம் அம்மையார் சரவணையைத் தனக்குப்பக்கத்திலே திண்ணையிலேயே படுக்கவிடுவது வழக்கம். அன்று தொடக்கம் சரவணக் குழந்தை அம்மையாருக்குச் சோதிரூபமாகவே காட்சிதந்தார்.

தீவுப்பகுதியைச்சேர்ந்த முருகேசுச் சுவாமியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் கொடிகாமத்தில் வெகுகாலம் சீவித்தவர். இவருக்கு ஒரு சிஷ்யை இருந்தார். அவரின் பெயர் பொன்னம்மாள். இச்சரவணையும் முருகேசுச்சாமியாருடனேயே வெகுகாலம் இருந்து அவரிடம் உபதேசம் பெற்றவர். முருகேசுச்சாமியாரே சரவணைக்கு சடைவரதசுவாமி என்னும் ஞானப்பெயரைச் சூட்டினார். முருகேசுச்சுவாமியார் சமாதியடையும்போது சடைவரதசுவாமியைப்பார்த்து நீ இனிமேல் என்னைப்பார்த்தது போல் தேவி பொன்னம்மாளைப் பார்த்துக்கொள் என்றார். அப்படியே சீவியகாலம் முழுவதும் தேவி பொன்னம்மாளையே சடைவரதசுவாமி குருவாக வழிபட்டார். பொன்னம்மாளின் சமாதி ஊசனில் உள்ளது.

---

## அருட்குரவர் வாழ்த்து.

(சித்தலையன்)

### விருத்தம்

அருட்குரவன் சடைவரதன் அடிவாழியவன்றன்னையன் பாலாண்ட
அருட்டேவிபொன்னம்மாள் அடிவாழியவட்கருளுமாசானாகும்
அருட்பரவுமுருகேசவண்ணலுடனருங்காசியடிகள்வாழி
அருட்பரம்குருகடையிற்சாமியடியார்களனுதினமும்வாழி.

### கட்டளைக் கலித்துறை

அண்ணாசிவன்செயலென்றறைந்தென்றங்கையாக்கைவிட்ட
தண்ணாருமன்போடறிவருள்சார்ந்தவத்தன்மைசற்றும்
எண்ணேனல்யோகநெறியினில்லேனென்னைசந்தறந்து
கண்ணேயனையான் கழலிணையந்தோகருதிலனே.

## சடைவரதசுவாமிகளின்
# திருவடியார் திருநாமாவளி.

(பூமாரி)

அம்பலததரசே என்ற மெட்டு

1 அரகர சிவசிவ சடைவரதா
அடியரை ஆண்டருள் குருவரதா
2 உன்னடி யார்பெயர் சிலவுரைப்போம்
உன்புக ழாம்பெரு நலமுரைப்போம்
3 மங்கையர்க் கரசியின் மாகுருவே
பொங்குந் திருவுறு பூவுருவே (சுன்னாகம்)
4 வாலாம் பிகையின் வண்டொண்டும்
பால்தே னெனக்கொண் டாயென்றும் ,,
5 நடரா சனுக்கோர் நன்மணியே
சடையா பரவனளி கொள்மணியே ,,
6 கந்தை யாவெனுங் கண்மணியே
வந்தடைந் தானுனை விண்மணியே ,,
7 திருவுறு விசுவ நாதனது
ஒருகுரு வேயடி யார்க்கமுது ,,
8 பிரேம சுந்தர மறையோனே
பேரன் பொடுதொழு மிறையோனே ஏழாலை
9 அம்பல மென்னும் அணியடியான்
புங்கவ னேயெம் மணிமுடியான் ,,
10 அருளா னந்தன் பெருமானே
அடைந்தா யுத்திரத் திருநாளே ,,
11 அகிலாண் டம்மா ளருங்குருவே
அடியார் குழுவின் பெருந்திருவே ,,
12 பேரம் பலவன் சீரன்பே
பெற்றாய் மருளுக் கோரம்பே ,,
13 கணபதி யடியவன் தனையாண்டாய்
குணமுறு மவனன் பதுபூண்டாய் ,,
14 அன்புறு மாறுமு கப்பத்தன்
அவனுக் கருளிய மெய்ச்சித்தன் ,,
15 செவ்வேட் டொண்டன் திருவடிகள்
சீரளி கொண்டிடு முருகழகன் ,,
16 சீரா ருங்குல வீரசிங்கம்
தீர்ந்தா னுனையடைந் தேபங்கம் (கொல்லங்கலட்டி)



17 சுப்பிர மணியாந் தூயனுக்கும்
நற்பத மருளிய நாயகனே (கொல்லங்கலட்டி)
18 கந்தை யாவுன் கான்முளையே
கால்கொடுத் தாண்டாய் வான்மழையே ,,
19 இராசா வென்னுஞ் சீரடியான்
நேசா நீள்செஞ் சடைமுடியான் ,,
20 சின்னத் தம்பியெ னும்பக்தன்
சீர்தொண் டதுகொண் டருள்சித்தன் ,,
21 பொன்னே ரொளியுறு பொன்னையன்
தன்னை யாண்டருள் முன்னையன் (பருத்தித்துறை)
22 மன்பால சுந்தர மாதவனே
அன்பா லடைந்தகுரு ஆதவனே ,,
23 மாதவ வேதவ னத்தடியான்
ஆதவ னேசடை மாமுடியான் ,,
24 பெரிய பிள்ளைப் பெண்மணியின்
பெருமா ளேயெம் பெருவாழ்வே ,,
25 வயிரமுத் தடியனுக் கானபிதா
மற்றும வர்க்கொரு ஞானபிதா (அச்சுவேலி)
26 சின்னா னென்னுஞ் சீரடியான்
சேர்ந்தா னுன்றன் திருவடிதான் ,,
27 பேரன் பேயுறு சீர்வேலன்
சூர்வெவ் வினையின் ஓர்காலன் (சித்தங்கேணி)
28 வல்லிபு ரத்தின் மாமணியே
மற்றும் பலவடி யார்கனியே (கொடிகாமம்)
29 நமச்சி வாயன் நாயகனே
நல்லடி யார்க்கொரு தாயகனே (நாவற்குழி)
30 மாதவ னென்னும் மாவடியான்
தீதற வாண்ட திருமுடியான் (கச்சாய்)
31 அப்பாத் துரையன் அருமருந்தே
இப்பா ரடியவர்க் கொருவிருந்தே (திருக்கோணமலை)
32 குணசே கரனின் குருநாதா
அணியா ரறவுரை யருள்போதா ,,
33 திருநா வுக்கர சன்குருவே
பெருமா ளெங்கள ருந்திருவே ,,

# திருவிளங்கும் சிறைச்சாலை.

(க. ஏ. மூர்த்தி)

சிலமாதங்கட்குமுன் ஒருநாள் தொண்டைமானாறு செல்வச்சந்நிதிக்குச்சென்று சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருந்தேன். எங்கிருந்தோ "உன்னை மறப்பனோ..........." என்னும் திருவருட்பாவை யாரோ தன்னைமறந்து பாடுஞ் சத்தம் கேட்டது. நான் என்னை மறந்தேன். அங்கும் இங்கும் தாவிப் பாய்ந்துகொண்டிருந்த என் மனம் என்னுள் எழுஞ் சோதியில் லயித்தது. என்னை மட்டுமல்ல அங்கு குழுமி வீண்வார்த்தைகளிலும் வீட்டுக் கதைகளிலும் ஈடுபட்டிருந்த அடியார்கள் யாபேரையும் தம்மை மறக்கச் செய்தது இக்குரல். பால் வேண்டி அழுத பச்சிளங் குழவிகள் கூடப் பாட்டிற் பரவசமுற்றனர். எங்கும் நிசப்தம் நிலவியது. இறுதியடியாகிய "இதுதருணம் அருட்சோதி எனக்கு விரைந்தருளே" என்ற அடிகள் பாடப்பட்டது. தம்மையறியாது அடியார்கள் சிரமேற் கைகூப்பினர். ஒன்றன்பின் ஒன்றாக எழுந்த திருப்பாடல்களில் எல்லோரும் லயித்தனர்.

இவ்விதம் பாடும் பக்தன் யார் என்பதை அறிய என் மனம் நாடியது. பாடல் வந்த திசையை நோக்கிச்சென்றேன். ஞானச்சுடராம் கணபதி வாசலை அடைந்தேன். மேனியெல்லாம் வெண்ணீறு பூசி சடைமுடிதாங்கிக் கழுத்தில் ருத்திராக்கம் அணிந்து கையிற் கமண்டலந்தாங்கிக் கண்களைமூடிப் பாடிக்கொண்டிருக்கும் சிவனடியாரைக் கண்டேன். சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கச்சென்ற எனது பார்வை அவ்வடியாரின் முகத்தை உற்று நோக்கியது. இவனா! இக்கள்வனா! இவ்வேடந்தாங்கியுள்ளான். இவன் சிறையிலிருந்து தப்பி ஓடி வந்துவிட்டானா? அல்லது விடுதலையடைந்து பிழைக்க வழியின்றி இவ்வேடந்தாங்கினனா? என்று என் மனதிற் பல வினாக்கள் எழுந்தன. ஆனால் இவன் முகத்தில் ஞானச்சுடர் விளங்குகின்றதே! உண்மையில் இவன் தன்னை அறிந்து விட்டானா? ஆம் தன்னை அறிந்து விட்டான். கலியுகவரதனின் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று. சற்று இவனைக் கூர்ந்து கவனிப்போம் என ஒரு பக்கத்தில் நின்றேன். தன்னை மறந்து தலைவனில் லயித்து உலகை மறந்திருந்த அம்மகான் கண்களைத் திறந்தார். நான் அசட்டையாகச் சாமியார்' என்றேன் அவர் எனக்கு விடைபகரா து 'பெரியோர்களே! (என விளித்தார் இவன் என்ன பெரியபேச்சாளனாயும் விட்டானோ. இவன் பழைய பசுபதியில்லையோ என்றது என் மனம்). என்னை உங்களில் அநேகர் அறிவீர்கள். என் வேடத்தைப் பார்த்துச் சிரிப்பீர்கள். நான் ஒருகாலம் ஒரு பஞ்சமாபாதகன், கொலை களவிற்கஞ்சாதவன். என் வாயில் எந்தநேரமும் மது அரக்கன் வாசஞ்செய்தான். கன்னியர்கள் என்னைக்கண்டு கலங்கினர். மாட்டாதோரை நான் ஆட்டிவைத்தேன். பெரிய சண்டியன் எனப் பேரும் பெற்றேன். ஆம் எல்லாம் எதனால்? நான் யார் என்பதை அறியாததனால். வீண் மதவாதங்களிலும் சாதிச் சண்டைகளிலும் ஈடுபடும் எங்கள் மத்தியில் உள்ள பெரியார்கள் எங்கட்கு எம்மை யாரென அறிய விளங்க வைக்காததனால். எங்கள் மத்தியிற் கற்றோர் பண்டிதர் அர்ச்சகர் என அநேகர் உளர். ஆயின் இவர்கள் இருப்பதனால் நாம் அடையும் பயன் என்ன? இவர்களில் ஆர் ஒருவர் எங்கட்கு எங்களை அறிய வைக்கின்றனர். பண்டிதர்கள் என இருப்போர் மேடைகளில் ஏறித் தங்கள் பாண்டித்தியத்தைக் காட்டுகிறார்களேயன்றி கிராமங்களில் ஞான அறிவைப் போதிக்க முன்வருகின்றனரா? எங்கள் கோவில்களிற் பூசகர்கள் பணத்திற்குப் பூசை செய்கின்றனரேயன்றி எங்கட்கு ஞானோபதேசம் அருளுகின்றனரா? எங்கள் மதப் பத்திரிகைகள் உபகதைகளையும், விளங்காத வேதவிளக்கங்களையும், பண்டிதர்சட்குமட்டும் விளங்கக்கூடிய கட்டுரைகளையும் எழுதுகின்றனவேயன்றி எங்க

---

முற்பக்கத்தொடர்ச்சி

34 அண்ணா மலையெனு மோரன்பன்
கண்ணே யெனவுறு சீரன் பன் (திருக்கோணமலை)

35 ஆங்கில வைத்தியர் குருசாமி
ஆம்பெரி யோர்க்குமிங் கொருசாமி (யாழ்ப்பாணம்)

36 இன்னும் பலவடி யார்தொண்டு
ஏற்றுக் கொண்டா யருள்விண்டே

37 நாயேன் தனக்கிங் கோர் தாயே
நவின்றேன் திருப்பா அருள்வாயே

38 பேயே னுடலுயி ருன் னுடைமை
பெரும்புகழ் பாடுதல் என்கடமை

ளைப்போன்ற அற்ப அறிவு படைத்தோருக்கு ஆத்மஞானத்தை விளக்குகின்றனவா? இக்குறைகளால் நாங்கள் எம்மை அறியாது உண்டு களிப்பதே பிறவிப் பயன் எனக்கருதி உண்டுகளிப்பதில் எம் வாணாளை வீணாளாக்குகின்றோம். மது அரக்கன் வசப்படுகின்றோம். பஞ்சமா பாதகங்களைப் புரிகின்றோம். நாம் புரியும் அடாதசெயல்கட்கு அரசினர் எம்மைச் சிறைக்கு அனுப்புகின்றனர். சிறைசெல்கின்றோம், திரும்புகின்றோம். ஆயின் நாம் கற்றதென்ன? திரும்பத் திரும்பச் சிறை செல்லுகின்றோம். பெரியோர்களே! இன்று என்னை அறியச்செய்தது சிறைச்சாலையே. சிறைச்சாலையில் நான் ஏதோ கடுமையாகத் தண்டிக்கப்பட்டுவிட்டேன் அதனால் நான் இவ்வேடத்தைத் தாங்கிநிற்கின்றேன் என எண்ணிவிடாதீர்கள். சிறையிற் கடுமையான தண்டனை ஒன்றும் கிடையாது. ஆனால் அங்கு எங்கட்கு எங்கள் ஊர்களிற் கிடையாத ஒரு அரும் பாக்கியம் கிடைத்தது. சிறைச்சாலையில் திரு திருவிளங்கம் அவர்கள் திருவிளங்கச்செய்கிறார். ஞாயிற்றுக்கிழமை தோறும் அங்கு கூட்டுவழிபாடு நடைபெறுகிறது. அதில் நான் பங்குபற்றப் பூர்வவாசனை என்னைத் தீண்டியது. பங்குபற்றினேன். அங்கு பெரியார் திருவிளங்கம் அவர்களோடு கூடி என்னை மறந்து என் அப்பன் பாடல்களைப் பாடினேன். அங்கு நடத்தப்படும் சொற்பொழிவுகள் என்னை நான் யார் என்று உணரவைத்தன. சதா நான் யார்? நான் யார்? நான் ஏன் பிறந்தேன் என் பிறவிப்பயன் என்ன? என்ற விசாரணையில் ஈடுபட்டேன். என் கடமையையும் என் நிலையையும் உணர்ந்தேன். சிறைச்சாலையில் எல்லோரும்ஒருசாதி. சாதிப்பூசல் இன்றி சகோதரர்போல் எல்லோரும் கூட்டு வழிபாட்டிற் பங்குபற்றுவோம். அதனால் நான்என்பது என்னைவிட்டு அகன்றது. பெரியோர்களே! எங்கள் நாடு உய்யவேண்டுமானால் நாம் எம்மை அறியவேண்டுமானால் எங்கள் நாட்டில் ஒவ்வொருகிராமத்திலும் கிழமையில் ஒருநாளாவது கூட்டுவழிபாடு நடத்தப்படல்வேண்டும். அதில் எல்லோரும் பங்குபற்றவேண்டும். நாங்கள் சதா இல்லை இல்லை என்று மிருகங்கள்போல் ஊண்தேடுவதில் அலைகின்றோம். ஒருகிழமையில் ஒருநேர ஊணை ஒறுப்போம். அதற்காக அலையும் நேரத்தை ஆண்டவனை உணர்ந்து அவன் அருளால் அவன்றாளை வணங்குவோம். எல்லோரும் ஓர்குலம் என்று எல்லாரும் கூடி எம்மை மறந்து அவன் புகழைப் பாடுவோம். அவன் பெருமைகளையும்



எம்மை அவன் ஆட்கொள்ளும் முறைகளையும் எம்மவரில் கற்றோர் எனப் பறைசாற்றும் பெரியோரே போதியுங்கள். நாம் உங்கள் போதனைகளைக் கேட்போம் எம்மை அறிவோம்.

எங்கள் நாட்டிற் பத்திராதிபர்களே! நீங்கள் எங்கள் ஆத்மா ஈடேற்றத்திற்கு வேண்டிய கட்டுரைகளை எழுதுங்கள். நாம் உய்வோம்! உய்வோம்!! வாழ்க மகாத்மா! வாழ்க மகாத்மாவால் உலகிற்களிக்கப்பட்ட கூட்டு வழிபாடு! வாழ்க கூட்டு வழிபாட்டை ஈழநாடெங்கும் பரவச்செய்யும் பெரியார் திருவிளங்கம்! வாழ்க சிறைச்சாலையில் நடக்கும் கூட்டுவழிபாடு! வாழ்க அதற்காக அரும் பாடுபடும் திரு. ப. குமாரசாமி. வாழ்க சிறைச்சாலையில் ஞான போதம்பெறும் அடியார்கள்! பரவுக கூட்டுவழிபாடு உலகெங்கணும்.

இவ்வாறு பஞ்சமா பாதகனாயிருந்து பரம ஞானியான பசுபதி பேசிமுடித்தான். என்னே! கூட்டுவழிபாட்டின் பெருமை என வியந்தேன். சிறைச்சாலையைச் சிவச்சாலையாக்கும் இவ்வழிபாட்டைப்பார்க்க ஆவலுற்றேன், அங்கு சென்றேன். சிறைச்சாலையா என்று வியப்படைந்தேன். அடுத்த இதழில் சிறைச்சாலையில் நடக்கும் கூட்டுவழிபாட்டையும் அதனால் நேரும் பயன்களையும் எழுதுகிறேன்.

## பொறுக்குமணிகள்.

[சுவாமி சுத்தானந்தர்]

கடவுள் உள்ளான்? பொதுவாக எங்கும் சிறப்பாக அவரவர் உள்ளமலரிலும் எழுந்தருளியுள்ளான். உடல் கோயில், உள்ளம் சந்நிதி, இறைவன் மூர்த்தி. எல்லார் உள்ளத்தும் இறைவன் உள்ளான். அவன் என்றும் உள்ளான்.

இறைவன் தானே தானான தன்னிலையில் வாய்மனங்கடந்தவன்; ஈறக்கலந்த இன்பத் தூயருக்கே உணர நிற்பான். இயற்கையை உடலாகக்கொண்டு விளங்கும்போதே அவனை வருந்தி வணங்குவல்லோம். ஐம்பொறி அடக்கிய ஞான தீரரான குருமார்கள் மூலமும் அவன் அருள் புரிகிறான்.

மனமாயங்கடந்த உள்ளத்திற் கனலும் இன்பமயமே கடவுள். கடவுளைக் கலந்தவாழ்வு களிப்பு; பிரிந்த வாழ்வு கசப்பு. உட்பொருளான சுத்தான்மாவை ஒன்றிவாழ்வே யோகம். அதன் உணர்வின்றி வாழ்வே மோகம், சோகம்.

# இராமதாசர் சரித்திரம்.

——:-:——

"பக்தி"

டாங்கூர் என்பது ஒருஊர். அவ்வூரில் பிராமணகுலத்தில் இராமதாசர் என்றொரு பக்தர்வாழ்ந்துவந்தார். அவர்தினந்தோறும் யாசித்த பிச்சைச்சோற்றினாலேயே குடும்பத்தைப் பாதுகாத்துவந்தார். ஆனால், இடையறாது இராமநாமத்தையே உச்சரித்துவந்தார். இவர் தமது வீட்டினயலிலே துளசிச்செடியைப் பயிர் செய்து வளர்த்தார். ஒவ்வொரு ஏகாதசியின்போதும் துளசியை எடுத்துக்கொண்டு துவாரகைக்குச்சென்று கண்ணனைப் பூஜை செய்து வந்தார்.

இப்படி இருபத்தைந்தாண்டுகள் நடத்திவந்தார். இவர் போகும்போதும் வரும்போதும் கண்ணனின் நாமத்தைப் பாடி ஆடிக்கொண்டு செல்வது வழக்கம். ஒரு ஏகாதசிக்கு இவர் துவாரகை செல்வது தடைபட்டது. அதைக்குறித்து மிகவருந்தி துவாரகை அடைந்து கண்ணபெருமானே! எனக்கு மூப்புவந்துவிட்டதனால் உன்னைத்தரிசித்து வரும் நியமத்தில் தவறினேன். இனிமேல் உன்னைத் தரிசிக்கவரமாட்டேன், அப்படி அடியேன் வராவிட்டாலும் நின் கருணை ஏழைமீது குறையாதிருக்கவேண்டுமென முறையிட்டார். சுவாமீ, இனி உன்னை எக்காலத்தில் காணப்போகிறேன், இதுதான் முடிவாகிய சேவை என்று பகவானுடைய திருவடியைப் பிடித்துக்கொண்டார்.

அப்பொழுது பகவான் அவரது அன்பத்தைக்கண்டு சகிக்கமாட்டாதவராய் தாசருக்கெதிரே எழுந்தருளி இவரை மார்போடணைத்துத்தாங்கி அன்பனே நெடுநாளாக என்னைச் சேவித்துவந்தாய், ஆகையால் உனக்கு நான் கடன்காரனானேன், இக்கடனை எவ்வாறு தீர்ப்பேன்? நான் உன்னோடு வருகிறேன்கொண்டுசெல் என்றார். "சுவாமீ, தேவரீரை எவ்வாறு கொண்டுசெல்வேன்?" எனது தேர்வரும் ஏற்றிக்கொண்டுசெல் என்றார் பகவான். தேரும் வந்தது. தேரில் ஏற்றிக்கொண்டுசென்றார் தாசர். சுவாமீ, தேவரீரை எங்கு ஒளித்துவைப்பேன்! என்வீட்டில் நீரிருந்தால் அர்ச்



சகர் முதலானோர் என்னை வந்து வருத்துவார்களே; தேவரீர் திருவுளமெப்படியோ என்று அயர்ந்தார்.

பொழுது விடிந்தபின் அர்ச்சகர் வந்து கோயிலில் பார்க்க அங்கு கண்ணபிரானைக் காணவில்லை. அர்ச்சகர் திகைத்தார். பக்கத்தேநின்ற ஒருவர் நேற்று இராமதாசர் இங்குவந்திருந்தார் அவரை அறியாமல் ஒன்றும் நடந்திருக்காது என்றார். உடனே அர்ச்சகரும் வேறுசிலரும் டாங்கூர் நோக்கிச்சென்றார்கள். இவர்கள் வருவதையறிந்த இராமதாசர் கண்ணபிரானிடஞ்சென்று சுவாமி! உடையவர்கள் வருகிறார்களே, யான் என்ன செய்வேன் என்று விண்ணப்பித்தார். சுவாமி மௌனமாயிருப்பதைக்கண்டு அவரை அங்குள்ள கிணற்றில் இறக்கிக் கிடத்திவைத்தார்.

வந்தவர்கள் எங்குந்தேடிக் காணாமல் கிணத்தண்டைசென்று பார்த்தார்கள். உடனே கிணற்றிலிருந்தும் எடுத்துத் தேர்மீதேற்றிக்கொண்டு சென்றார்கள். தாசர் உடனே, சுவாமீ! என்னைவிட்டுப்போகிறீரே என்றழுதார். பகவான், தாசரே அங்கிருப்பதுபோலவே இங்குமிருப்பேன் துக்கத்தை விட்டொழியுமென்றார். சுவாமீ தங்களை தேர்மீது ஏற்றிக்கொண்டுசெல்கிறார்களே, தாங்கள் எவ்வாறு அவர்களினின்று விடுபட்டு வருவீர்கள்? தாசரே! என்நிறையளவான பொன்னைக்கொடுத்து அர்ச்சகரிடம் வாங்கிக்கொள்ளுமென்றார்பகவான். சுவாமீ அவ்வளவுபொன் என்னிடத்தில் இல்லையே உன்மனைவியின் மூக்குத்தியை நிறுத்தால் என்நிறைக்குச் சரியாகுமென்றார் பகவான். உடனே தாசர் ஓடோடியும் சென்று அர்ச்சகரிடம் பிரார்த்தித்தார். அர்ச்சகர், இவன் பரமதரித்திரனாயினும் பேச்சுப் பல்லக்காயிருக்கிறானே என்று ஊரவர் முன்னிலையில் கூட்டம் கூட்டினார். கண்ணபிரானை ஒரு தட்டிலும் மூக்குத்தியை ஒரு தட்டிலும வைத்தார்கள். மூக்குத்தியின் தட்டு தாழ்ந்தது. யாவரும் அதிசயித்து நின்றார்கள். தேவர்கள் பூமழைபொழிந்தார்கள் தாசர் ராம ராம ராம ராம ராம ராம என்று பாடினார். அர்ச்சகர்கள் பார்த்தார்கள், 'பாந்தாமன் இவருக்கு இப்படிக் கிருபைசெய்தால் நமது எண்ணங்கள் எப்படி நிறைவேறும்" என்று கண்ணபிரானையும் தாசர் வீட்டிலேயே ஸ்தாபித்து துவாரகையில் வேறொரு கண்ணனை பிரதிஷ்டைசெய்தார்கள்.

# தக்ஷிணகைலாச மான்மியம்.

## பத்தொன்பதாவது நவசைலப்படலம்.

சூதமுனிவர் சொல்வது:—

நைமிசாரண்ணியவாசிகளே! இப்போது உங்களுக்கு நவசைலமான்மியத்தைச் சொல்லுகின்றோம்; நீங்கள் எல்லோரும் கவனமாய்க் கேட்பீராக:

நவசைலமானது யாழ்ப்பாணத்திலே அழகுவாய்ந்த புத்தூரென்னும் பதியிலே பூமிக்குமேல் சிறிது உயரமாயும் ஐந்து குரோச விசாலமுள்ளதாயுமிருக்கின்றது. நவசைலத்தின்மேல் ஒரு குகையும் இருக்கின்றது. அது மங்களகரமானது. அதன் கந்தரமத்தியில் நீலரத்தினத்தினால் அலங்கரிக்கப்பட்ட மையினால் அழகு வாய்ந்து விளங்கும் சிங்காசனத்தின்மீது விந்துநாத ரூபரும் தேவரும் தாரகப்பிரமமும் சாசுவதரும் உமாதேவியாருடன் கூடியிருந்து உலகத்துக்குச் சுகஞ்செய்பவரும் ஆகிய சங்கரர் இடப்பாகத்தில் விநாயகரும், வலப்பாகத்தில் சுப்பிரமணியரும், மற்றும் நந்தி பிருங்கி மகாகாளர் சேயனார் முதலானவர்களுஞ் சூழ்ந்திருக்க, மகாதேவரால் உலகங்களுக்கு அநுக்கிரகஞ்செய்யும் விருப்பத்துடன் எழுந்தருளியிருந்தனர்.

இவ்வாறிருக்குந்தருணத்தில் பாதாளத்திலுள்ள கங்காதேவி சிவனுமதிப்படி அதிகபிரவாகத்தோடும் இரைச்சலோடும் மீன் முதலிய நீர்வாழ் செந்துக்களோடும் தாமரை முதலிய பலவகைப் புட்பங்களோடும் அலைசூழ்ந்த குமிழிகளோடும் கலையைப் பிளந்து அதிவேகமாய்த் தடாகத்தில் வந்துதோன்றி விளங்கினாள். கருணையங் கடலாகிய மகேசுவரன் கங்கையின் தோற்றத்தைக்கண்டு தமது திருக்கரத்தினால் அக்கங்கையை எடுத்து விந்து அளவு சடையில் தரித்துக்கொண்டு மிச்சத்தை மேலேவிட்டு மங்களமுண்டாகுக வென ஆசீர்வதித்து அத்தேவ தேவேசுவரன் கங்காதரிசனத்தினால் வசஞ்செய்யப்பட்ட புத்தியுடையவராயினர். அவ்வுமை மணவாளர் இப்பொழுதும் அக்குகையில் இருக்கின்றனர். அந்த நவகிரிக்கொப்பு இதன் முன்னும் இல்லை. இனி உண்டாகப்போவதுமில்லை. பராசரர் முதலான முனிவர்கள் பிரமநிஷ்டாபரர்களாக



# அருட்குரவன் அருட்டிறன்.

——:-;——

(பிரேம சுந்தரன்).

எனது நண்பரும் பின்பு குருசகோதரருமான ஸ்ரீமான் ஐ. பொன்னையா (அருளானந்தசிவம்) அவர்களிடம் நான் அடிக்கடி போய்வருவதுண்டு. அவர் வேதாந்த விசாரமுள்ளவர். பின், சைவசித்தாந்தக்கொள்கை பூண்டவர். அவர் நவாலியூர் வாசியான (லோகி) வேற்பிள்ளை அவர்களிடம் மூர்த்தித்தியானம்பெற்றவர். பூர்வகன்மவாசனையாற்போலும் அவருக்குப் பெரியோரிடத்து மதிப்பும், ஞானநூல்கற்கும் விருப்பும், கடவுட் பக்தியும் மிகுதியாயிருந்தன. அவரோடு சேர்ந்து பழகிய எனக்கும் சற்குருவை அடையவேண்டுமென்னும் அவா அதிகமாயிருந்தது.

---

முற்பக்கத்தொடர்ச்சி

அங்கே வசிக்கின்றார்கள். முனிவர்களே! வேறிடத்தில் வெகுகாலத்தினால் சாதிக்கத்தக்கது அவ்விடத்தின் மகிமையினால் உடனே சித்தியாகும். யாவன் ஒருவன் தனது வாழ்நாளின் இடையில் இக்கங்கையைப் பார்க்கின்றானோ அவன் தன் நூறுகோடி குலத்துடன் சிவனோடுகூடி மகிழ்ச்சியடைவான்.

அருத்தோதயம், பஞ்சபருவம், மகோதயம் ஆவணி மாதம், தைப்பூசம், மாசிமகம், சந்திர சூரிய கிரகண முதலான புண்ணிய காலங்களில் ஸ்நான தான முதலியன செய்பவன் புலனொடுங்கிப் பரிசுத்தனாவான். அவன் அடையும் புண்ணியப்பயன் இன்னதென்று சொல்லப் பிரமதேவனாலும் முடியாது. இச்சரித்திரம் பாவத்தைப்போக்கும்; புண்ணியத்தை நல்கும்; நீண்ட வாழ்நாளும் உண்டாகும். இதனைப் படிப்பவரும் கேட்பவரும் சிவசாயுச்சியம் பெறுவர்.

குறிப்பு: இங்கேகுறிக்கப்பட்ட நவசைலம் நவகிரியாகும். பாதாளகங்கை நிலாவரையாகும். நவசைலேஸ்வரத்தைத் திருத்தியமைத்து வழிபட அன்பர்கள் முன்வருவார்களாக. புராதன ஸ்தலங்களைப் புதுக்குவதன்றோ பெரும் புண்ணியம்.

—கருணாநந்தன்

ஒருநாள் மாலை அவரது வீட்டுக்குப்போயிருந்தேன். அங்கு கந்தைகட்டிய ஒரு சாது வந்திருந்ததைக்கண்டேன். அச்சாதுவிடம் அவர் அதிக அன்பாயும், கண்ணியமாகவும், பணிவாயும் பழகியதைப்பார்த்தேன். இளைஞனாயிருந்த நானும் அச்சாதுவால் பெரிதும் வசீகரிக்கப்பெற்றேன். "அவர்தான் அச்சுவேலி சரவணச்சாமி என்று அழைக்கப்படுபவர்" என்று அன்பர் இரகசியமாய் அறிமுகப்படுத்தினர். வீடுதிரும்புகையில், "இப்படிப்பட்ட பெரியோர்களுக்குத் தொண்டு பூண்டொழுக எனக்கும் ஆசையாயிருக்கிறது" என்று நான் நண்பரிடம் தனிமையில் சொன்னேன். அவர் புன்னகைபுரிந்து, "இது சார்போதம், ஐயா!" என்றனர். அந்தச்சாது அப்பொழுது அதிக பேச்சில்லாதவராகக் காணப்பட்டார். அவர், நண்பர் வீட்டிற் சிலநாட்கள் தங்கியிருந்ததாக ஞாபகம்.

சிலமாதங்களின் பின் காலஞ்சென்ற கண்டி குமாரசாமிக்குருக்களிடமிருந்து, "கதிர்காமம் புறப்படுகிறோம், உடனே வருக" என எனக்கொரு தந்தி வந்தது. எனது தாயாரிறந்துபோக ஏகபுத்திரனும் என்னைப் பிரியமனமில்லாத எனதரும்பெறற்றந்தையார் எனக்கு அனுமதி தந்து அனுப்பிவைத்தார். கதிர்காமத்தில் நான் கண்ட காட்சிகளும், அடைந்த அனுபவங்களும், அனேகமும் அற்புதமானவைகளுமாகும். அங்குமுருகனருளால் என்னிடத்தில் மனமொழிமெய்களில் ஒரு புதியமாற்றம் உண்டானதை உணர்ந்தேன்.

கதிர்காமத்திலிருந்து கண்டிக்குத்திரும்பினோம். ஒருநாள் செல்வவிநாயகராலய முன்னிலையில் குருக்களும் நானும் கூடிக் கதைத்துக்கொண்டிருந்தோம். குறித்த சாது தற்செயலாக அவ்விடம்வந்து கோயில்வாயிலுட்புகுந்து அப்பிரதட்சிணமாகப்போய்க்கொண்டிருந்தார். என்னை ஏதோ இரும்பைக் காந்தம் இழுத்தது போல்இழுத்தது. அவ்வளவுதான்! உடனேகிளம்பி "இவர்தான் நண்பர்பொன்னையாவின் குருநாதர்" என்றுகுருக்களிடம்கூறிவிட்டு, அச்சாதுவைப் பின்தொடர்ந்தேன். குருக்களும் கூடவேவந்தார். சாது வடக்குப்பிரகாரத்திற் சிறிது தூரஞ்சென்று கீழே உட்கார்ந்தார். நாங்களும் அவரை வணங்கிவிட்டு அருகில்உட்கார்ந்தோம் சிறிது சம்பாஷணையின் பின் சுவாமிகளைச் சிலநாள் தங்கிப் போகு



மாறு வேண்டினோம். அவரும் சம்மதித்தார். அவருடன்பேசிய விஷயங்கள் அனேகம். அவரது ஆணித்தரமான விடைகள் அற்புதம்.!

அடுத்தநாள் ஆன்மலாபத்தில் ஆசையுற்றிருந்த பொலீஸ் வல்லிபுரமும், வியாபாரி கார்த்திகேசுவும் வந்து சேர்ந்தனர். சுவாமிகளை விசாரித்தவிடத்து, தாம் அநுராதபுரத்திலிருந்து வருவதாகவும், தமக்கு அவ்விடம் (கண்டிக்கு) வர ஒரு பெரும் இழுப்பிருந்ததாகவும், 'இனி கொழும்புக்குப்போக விரும்புவதாகவுங் கூறினர். அங்குதங்கிய சிலநாட்களும் ஆன்மலாப சம்பந்தமான அனேகவிஷயங்கள் பேசப்பட்டன. அவையெல்லாம் ஆறுதலும், ஆனந்தமும், அளிப்பனவாக இருந்தன. நான் சமய தீக்ஷைப்போது பெற்ற சூக்குமபஞ்சாக்கரத்தை விடுத்து, ஸ்தூலபஞ்சாக்கரத்தை ஜபித்துக்கொண்டிருப்பதாகக் கூறினேன். சுவாமிகள் சாந்தமாக, "மகனே! அது நல்லநோக்கத்தோடேயே செய்யப்பட்டது ஆதலாற் பாதகமில்லை" என்று பதிலளித்தார். சுவாமிகள் சிலகாலத்தின்பின் "மூர்த்தியுபாசனைமோட்சக்கற்பைக்கெடுக்கும்" என்று கூறியது ஞாபகத்திலிருக்கிறது. கடையேனிடத்துள்ள குற்றங் குறைகளையவேண்டியும், குருவருள் கூட்டவேண்டியுமே கதிர்காமயாத்திரை ஏற்பட்டதெனத் தெளிந்துகொண்டேன்.

சுவாமிகள் கண்டியில்வைத்தே கடையேனுக்கு மந்திரத்தியானோபதேசம் செய்தனர். அவர் கொழும்பிற்குப் புறப்பட்டபொழுது தாயைப்பிரிந்த சேய்போலாயினேன். "யாழ்ப்பாணத்திற் சந்திப்போம்' என்றதனால் ஒருவாறு சமாதானம் அடைந்திருந்தேன். திரும்ப யாழ்ப்பாணத்தில் சுவாமிகளைச் சந்திக்கும் பாக்கியங் கிடைத்தது. தாயினுமினியனாகி வந்தெனைத் தடுத்தாட்கொண்ட சுவாமிகள் நிஷ்டைகூடியிருக்கையில், அவரது திவ்விய சந்நிதானத்திலே மந்திரத்தியானத்தில் இலயித்திருப்பேன் சிறிது காலத்தில் அம்மந்திரம் என்னை ஒரு சுத்தநிலையில் வைத்துவிட்டுத் தூங்கினவன் கைப்பொருள்போல தானாகவே நழுவிவிட்டது. அதனை அருட்குரவருக்கு அறிவித்தவிடத்து, 'அதுவே வேண்டப்படுவது" என்று கூறி அப்பால் வழிகாட்டினர்

சுவாமிகள் சொல்லித்தந்த மந்திர சாதனை அதி சுலபமும் சூக்ஷ்மமுமானது. அவரது சந்நிதான மகிமையோ வெகு விசேட

மானது. சீவியகாலமுழுவதும் செபஞ்செய்தும் அடையமுடியாத பலனை அவரது திவ்விய சந்நிதானம் அதிசீக்கிரத்தில் அளித்துவிட்டது. அவரது அன்பினாலும் அரிய உபதேசங்கள் அறிவுரைகளாலும் அனேகம் அடியார்கள் ஆகர்ஷிக்கப்பட்டனர். அதன் பேறாக அனேகர் ஆத்மலாபம் அடைந்தனர்.

ஏழாலைச் சாதி சங்க மடாலயம் சுவாமிகளது பெருமுயற்சியாற் கட்டப்பட்டது. மூலஸ்தானத்தில் கருணாகரப்பிள்ளையார் எழுந்தருளியிருந்து பக்தர்களுக்குக் கருணைபுரிகின்றார். அடியார்கள் கூடியிருந்து பஜனை, பூஜை, தியான நிஷ்டைகள் புரிவதற்கு அது ஒரு வாய்ப்பான இடம், மடத்திற்கு அணித்தாய் அதனை தென்கீழ்ப்பாகத்தில் அருளானந்தசிவம் அமைத்த நால்வர் கோயிலுமிருக்கின்றது. அங்கு சேக்கிழார் சுவாமிகளும் எழுந்தருளியிருக்கின்றார். குருசுவாமிகளது பிம்பஸ்தாபனத்திற்கும் சிவம் அடிகோலியுமிருந்தார். ஆனால் அதற்குள் அவரும் சமாதியாய் விட்டார்.

செல்வச்சந்நிதியிலும் சுவாமிகளது நன்முயற்சியால் தொண்டர்மடமொன்று கட்டப்பெற்று, விழாக்காலங்களில் விசேஷ அன்னதானம் நடந்துவருகிறது. அதனைச் சுவாமிகளது சிஷ்யரும், பிள்ளைமுறை பூண்டவருமான வயிரமுத்து என்பார் பரிபாலித்து வருகின்றார். உசனைச் சார்ந்த 'போக்கட்டி' யென்னுமிடத்தில் சுவாமிகளது குருதேவி ஸ்ரீ பொன்னம்மாள் சமாதியும், மடமும் சுவாமிகளாற் கட்டப்பெற்றன.. மடம் சுவாமிகளது சிஷ்யை மங்கையற்கரசியார் பராமரிப்பில் நடந்துவருகிறது.

சுவாமிகள் கடையிற்சுவாமிகள் பரம்பரையைச் சேர்ந்தவர். அவருக்கு அவரது அருட்குரு கொடுத்த நாமம் சடைவரதர் என்பது. சுவாமிகளது கருணாவிலாசம் பொருந்திய முகமண்டலமும் சிறந்த சடையழகும், திருவேடப்பொலிவும் என்றும் நினைவுகூரத்தக்கன. கண்டாருள்ளத்தைக் கரைக்குந்தன்மையன. அவர்களது சாதுரியமான வாக்கு யாவர் மனதிலும் பசுமரத்தாணிபோற் பதியத்தக்கது. தர்க்கவாதங்கள் சந்நிதானத்தில் சற்றும் இடம்பெறா—தலைகாட்டா.

அடிகளார் தாம் ஒரு துறவியாயிருந்தபோதிலும் தமது சிஷ்யர்களும் இல்லந்துறந்தவர்களாயிருக்கவேண்டுமென்று விரும்பினா



ரல்லர். ஆயினும் அவரது சிஷ்யர்களுள் சிலர் துறவிகள் சிலர் கிருகஸ்தர். அவரது தாயினும் மிக்கதயாவே அனேகரைத் தடுத்தாட்கொண்டதெனலாம். "எல்லாந் திருவருட்செயல்" என்ற கொள்கையையே எக்காலமும் எக்காரியத்திலும் எப்பொழுதும் எல்லாரும் கடைப்பிடித்தொழுகி, அருளால் அனைத்தையும்பார்க்கும் அனுபவத்தையடைந்துய்ய வேண்டுமென்பதே அவரதுவேணவா. அகத்துறவையும், தன்னையறிந்து தலைவன்மேற் பற்றுறுதலையுமே அவர் பெரிதும் போற்றிப் புகட்டுவது.

அடிகளார் அன்பர் பொன்னையாவை அருளானந்தம் என்றும், அடியேனைக் கருணாநந்தம் என்றும் அன்புடன் அழைப்பர். அவர் ஏகாலியர்குலத்தில் அவதரித்தவராதலால், அவரைப் பொதுவாக வண்ணாரச்சாமியென வழங்குவர். அன்பர்களது இதயப்பாரங்களை ஒலிப்பராதலால் அவரை 'வண்ணான்' எனத்தகும் அந்த வண்ணான் (குரு) கருணையால் இன்றும் வாழ்கின்றார் பல அடியார்.

அடிகளார் குருவையடையுமுன் சங்கீதம், நாட்டியம், மிருதங்கம் ஆதியவற்றில் பெரிதும் ஈடுபட்டிருந்தவராம். அவற்றின் வாசனாதோஷத்தை நிவிர்த்திக்க அடிகளார் கைக்கொண்ட அகத்தண்டம் புறத்தண்டங்கள் அனந்தமாம். அவரது பிறந்த குலத்தையும் பூர்வாச்சிரமத்தையும் பார்த்து, அவரையொரு போலிச்சாமியாரென இகழ்ந்துபேசிப் பழிபூண்டவருமுண்டு. 'சிறியவரிகழ்ந்து ஞானிசெய்த பாவத்தைக்கொள்வர்' என்பது சிரியர் வாசகம்.

அடிகளார் அடியேனைப் புத்திரவாத்சல்யத்தோடு பேணி நடத்தினர். அதைப்போலவே அத்தனை பல அடியார்களையும் நடத்துதற்கு எத்துணையகன்ற உள்ளம் அவருக்கிருந்திருக்க வேண்டும் என்றெண்ணி நான் பலமுறை வியப்புறுதலுண்டு. 'குருவே கடவுள்' என்பது ஆன்றோர் கூற்றன்றோ? அடியேன் பிழைவழிச்செல்லநேரின், இன்றும் காட்சிகள்மூலம்—அன்று நனவிற்போலவே—நல்வழிச்செலுத்தும் பெருங்கருணைத்திறத்தைப் பிறிதென்னென்பது? தடுத்தாட்கொண்ட திருவருள் தவறாது தாங்கும்; தவறிழைக்க விடாதென்பதே தமியேன் துணிபு.

# “தொழுவார் தங்கள் துயர் தீர்ப்பாய்”

———:-:———

[பிரமசாரி சோமசுந்தரம்].

ஆழிபோற் சுழன்று வரும் இப்புவியின்கண் துயர் மல்கி இருப்பதைக் காணலாம். பகலும் இரவும் கலந்ததே நாள். மக்கள் வாழ்வு ஒருகாலத்தில் ஒளி பெற்றிலங்கியும், மறு பொழுதில் இருளடையப் பெற்று மிருக்குமன்றோ! துன்பமின்றேல் இன்பமில்லை. இன்பமின்றித் துன்பமில்லை. இவ்வுலக வாழ்க்கையினைக் கடுங்காவல் தண்டனையாக நினைப்பர். ஏழைக்குத்தான் இந்நினைப்பென்பது தவறு. செல்வனுக்கும் அத்தகைய நினைப்பு உண்டு. செல்வன் பணத்தால் பொருளைப் பெறலாம், இன்பத்தினைப் பெற இயலாது, துன்பத்தினையும் போக்க இயலாது.

---

முற்பக்கத்தொடர்ச்சி.

அடிகளார் சமாதியடையுமுன் உசன்மடத்தில் சிறிது சுகவீனமுற்றிருந்தனர். எனது குருசகோதரர் அருளானந்தம் அவரைத் தரிசிக்கவேண்டி உந்துவண்டியில் அங்குபோயிருந்தனர். அவர் வீட்டுக்குத் திரும்பிவருகையில், அடிகளுந் தமது பிரிய சிஷ்யை மங்கையர்க்கரசியை விளித்து, “நானுந் தம்பியோடுகூட ஏழாலைக்குப் போகப்போகிறேன், பிள்ளை!” என்று சொல்லிவிட்டு அருளானந்தத்துடன் ஏழாலை மடத்துக்கு வந்துவிட்டார். அங்கு வந்த மறுநாள் பிற்பகல் நாலுமணியளவில் பால்பருகிவிட்டுச் சாய்மணையிற் சாய்ந்து சம்பாஷித்துக்கொண்டிருந்தவர் சடுதியில் பரமசாந்த மகாசமாதி எய்தினர்.

அடிகளார் யுவ வருடம் ஆடிமாசத்து உத்தர நட்சத்திரத்திலே—தமது குருதேவி அடைந்தநாளில்—தாமும் சமாதி அடைந்தனர். அவரது சமாதி ஏழாலையில் அமைய நேர்ந்தது, எம்மனோர் செய்த புண்ணியமே. அடியேன் ஓய்வுநாட்களில் மேற்கே அடிகளது சமாதிக்கோ, கிழக்கே நவகிரியிலுள்ள நவசைலேஸ்வரத்திற்கோ சென்று தரிசிப்பது வழக்கம்.

அருட்குருநாதன் அருட்திறம் பொலிக!
சடைவரதசுவாமிகள் திருவடிசரணம்!!
வாழ்க சைவம்!!! வாழ்க நற்றொண்டர்!!!!



அமைதியை அடையான், சாந்தியைப் பெறான். ஓய்வும் அமைதியும் இன்றேல் இன்பம் இல்லை. அவற்றிற்கு மனத்தைப் பக்குவப் படுத்தவேண்டும் அதுதான் வாழ்க்கையின் நோக்கம்.

“மின்னின் நிலையில
மன்னுயிர் ஆக்கைகள்”

மரணம் எவர்க்கும் ஒத்த முடிபாக விருக்கும். பிறந்தோர் உறுவதோ பெருகிய துன்பம். காரணம் பிறப்பு எப்போதுண்டோ அப்போதே இறப்பு உளது. உயிருள்ள பிராணிகள் எல்லோருக்கும் இது ஒத்த முடிபு. இவ்வுலகம் பிணி சாக்காட்டுடன் கூடியதாதலால் அறிவாளிகள் உலகத்தின் இயல்பை அறிந்து தமக்குற்ற நோய்க்கு இடங்கொடாது வாழ்வர்.

“வாழ்வாவது மாயம்இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழா(து) அறஞ் செய்மின்தடங் கண்ணான்மல ரோனும்
கீழ்மேல்உற நின்றான் திருக் கேதாரம் எனீரே”

(சுந்தரமூர்த்திநாயனார்.)

உலகவாழ்க்கை நிலையற்றதாதலின் அழிவது உறுதி. அதனால் உயிர் உள்ளபோதே காலதாமதம் செய்யாது அறஞ் செய்யுங்கள் என்கிறார். ஏனெனில் உடல் அழியினும் அழியாததுணை அறமேயன்றோ?

“அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க
மற்றது பொன்றுங்கால் பொன்றாத்துணை” (குறள்)

பசிநோயின் காரணமாக ஆசையின் வலைப்படுத்திய நெறிச்சென்று பிறவிப் பெருங்கடலை நீந்தும் பொருட்டு, இறைவனைச் சரணமடையுங்கள் என்னும் கருத்தால் ‘திருக்கேதாரம் என்னீர்’ என்கிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

இனி உலகத்திலுள்ள எல்லாவுயிர்களும் இன்பப்பேற்றினையே முடிந்தபதமாக அவாவுதல் உணர்ந்து உலகத்திலுள்ள சிறந்த சமயங்களெல்லாம் நிலையில்லாத ஏனைச் சிற்றின்பங்களைப் பெறுவதிற் கருத்தூன்றல் ஒழிந்து நிலையான கடவுளின்

பேரின்பத்தைப் பெறுகவென அறிவுறுப்பனவாயின. இங்ஙனம் இதை இனிது விளக்கும் பொருட்டே மாணிக்கவாசகப்பெருமான்

"வைத்தநிதி பெண்டிர் மக்கள்குலங் கல்வியெனும்
பித்தவுலகிற் பிறப்போடிறப் பென்னுஞ்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றாதாய் கோத்தும்பீ!"

என்றும் அருளிச் செய்தனர்.

மனித ஜன்மம், மோக்ஷ இச்சை, மகான்களுடைய உறவு ஆகிய இம் மூன்றும் இவ்வுலகில் கிடைப்பது அருமை. இம்மூன்றும் கிடைக்கப் பெற்றவர் யாரோ அவரே பாக்கியமுடையவர். ஆதலின் படைப்பில் உயர்ந்த பொருள் மனிதன் ஆவான் என்பது யாவருமறிந்த உண்மை. மனிதன் ஒருவனைத்தவிரமற்றவை யாவும் இன்பம் நிறைந்துளவாகவே தோற்றுகின்றன. மனிதன் கடவுளின்சிருஷ்டியில்உயர்ந்தபொருளாயின் அவன் இவைகளைக் காட்டிலும் அநேகமடங்குஅதிகவின்பத்துடன் வாழவேண்டாமா?

மக்களாய்ப்பிறந்தார் ஒவ்வொருவரும் விரும்புவது இன்பமாகவாழ்வதையே. துன்பத்தை எதுவும் விரும்புவதில்லை. துன்பங்களை அணுகாது இருக்கவே ஆசைப்படுகின்றனர். உலகத்தின் கட்காணப்படும் எல்லா உயிர்வகைகளும் துன்பத்தை விலக்கி இன்பத்தைப்பெறும் முயற்சி ஒன்றிலே மட்டும் கருத்தூன்றி நிற்கின்றன. துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமுமே அறிவினும் நாகரீகத்திலும் மேலவராகக் கருதப்படும் மக்களிடத்தும் அடுத்தடுத்து நிகழ்வதுங்கண்டு கருதுங்கால் எல்லா உயிர்களும் துன்பநீக்கத்தையும் இன்பப்பேற்றையுமே அவாவிநிற்கின்றன என்பது நன்குபுலப்படும். புழுமுதல் தேவர் ஈறாக எல்லா உயிர்களும் துன்பநீக்கத்தையும் இன்பஆக்கத்தையும் அவாவி முயன்றாலும் அவ்வுயிர்கள் எல்லாம் தத்தமக்கு அறிவு எட்டிய வரையிலே உலகத்துப் பொருள்களைப் பற்றியும் தம்மை யொத்த சிற்றுயிர்களைப் பற்றியும் எல்லாவற்றிற்கும் மேலான கடவுளைப் பற்றியும் நின்றமையால், அவ்வுயிர்கள் மாட்டுத்தோன்றிய இன்பமும் பலதிறப்பட்டதாயிற்று.

[தொடரும்].



முற்றொடர்ச்சி.

# ராமநாமம்.

—:-;—

[மகாத்மா காந்தியடிகள் ஆங்கிலத்தில் எழுதிய நூலின் மொழிபெயர்ப்பு].

## 10-ம் அத்தியாயம்.

என் எண்ணத்திற்கெட்டியளவில் ராமநாமத்திற்கும் மந்திர வித்தைக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. ராமநாமம் இதயத்திலிருந்து எழும்புமாயின் அகண்ட சக்தியின் அருள் இறங்குவது போலிருக்கும். அணுக்குண்டும் அதற்கொரு தூசுதான். ராமநாமம் இதயப்பூர்வமானதாயிருக்கவேண்டுமென்று சொல்வது இலகுதான் ஆனால் அந்நிலையை அடைவது மிகக்கஷ்டம். ஒருமனிதன் அடையவேண்டிய அரும்பொருள் அதுவே.

## 11-ம் அத்தியாயம்

### என் ராமன்.

இந்துக்களல்லாதாரும் எப்படி ராமநாம பஜனையில் பங்கு பெறலாம், என்று வினவியதற்கு விடையாகக் காந்திஜீ மேல்வருமாறு விடையளித்தார்.

ராமன் அல்லது ராமநாம பஜனை இந்துக்களுக்குத்தான் உரியது என்றும், ஆகவே அதில் முஸ்லீம்கள் எப்படிப் பங்குபெறலாம் என்றும் சிலர் எதிர்வாதம் செய்யும்போது என்னுள்ளே யான் சிரித்துக்கொள்வதுண்டு. முஸ்லீம்களுக்கு வேறுவேறு கடவுளுமுண்டோ? எங்கும் நிறைந்த பரிபூரணமான தெய்வம் ஒன்றே பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும். அப்பெருமானை எங்களுக்கு வாசியான பழக்கமான பெயரினால் யாம் ஞாபகப்படுத்துகின்றோம். அயோத்தியை ஆண்ட தசரதன் மைந்தன் எனச் சரித்திர நூல்கள் கூறும்—ராமன் எனது ராமனாகான். ஆதியந்தமில்லாத தன்னிகரில்லாத் தனிப்பெரும் பரமனே அவன். அவனையே யான் வணங்குகின்றேன். அவன் எல்லாருக்கும் பொதுவானவன். ஆகவே ஒரு முஸ்லீமோ அல்லது வேறுயாரோ அதை மறுக்க முன்வருவதற்கு எவ்விதகாரணமும் அறிகிலேன். ஆனால் இறைவனை எவர் "ராமன்" என்றே கூறவேண்டும் என்ற நியதியில்லை. அவர் இறைவனை அல்லா என்றோ 'கூடா' என்றோ இசைக்கு இழுக்கு இல்லாது கூறலாம்.

குறிப்பு: நீங்கள் இறைவனில் நம்பிக்கை இல்லை எனக்கூறலாம் ஆனால் அவனருள் இன்றி உங்களால் அணுவளவும் அசைய முடியாதென்பதை அறியீர். ஈஸ்வரர்! அல்லா!! அல்லது ராமா!!! என்று அழையுங்கள். நிலவுலகிலுள்ள மக்கள் தொகுதி எவ்வளவோ அவ்வளவு தொகுதியான நாமங்கள் உடையான். ஏகன் யாவர்க்கும் தலைவன். தன்னிகரில்லாத பெரியோன். நாம, ரூப, கால குணங்களுக்கு அப்பாற்பட்டவன். அப்படிப்பட்டவனே எனது ராமன். அவனே எனது எஜமானும் தலைவனும் ஆவான்.

## 12-ம் அத்தியாயம்.

### ராமன் யார்.

வினா: "ராமன் என்னும்போது அண்டத்தையாளும் பரம் பொருளையன்றித் தசரதன் மைந்தன் ராமனை யான் குறிப்பிடவில்லை. எனப் பலகால் கூறியிருக்கிறீர்கள். ஆயின் உங்கள் ராமநாம பஜனையில் 'சீதாராம்' 'ராஜாராம்' 'சீதையின் பதியாகிய ராமனுக்குப் போற்றி' எனக் கூறுகிறீர்கள், தசரதன் மகனல்லாது இவன் வேறு எந்த ராமன்.

விடை; ராமநாம பஜனையில் 'ராஜாராம், 'சீதாராம் எனக் கூறுவது உண்மைதான். ராமனிலும் ராமன் நாமமே சக்திவாய்ந்தது. விலைமதிக்கமுடியாத அரும் பெரும் மாணிக்கங்கள் நிறைந்த எல்லையற்ற ஓர் பெரும் சாகரம் போன்றது. இந்துதர்மம் எவ்வளவு கூடக் கூட ஆழத்தில் சுழியோடலாமோ அவ்வளவுக்கவ்வளவு கூடுதலான நிதிக்குவை பெறலாம். இந்து சமயத்தில் இறைவன் எண்ணில்லா நாமங்களால் அழைக்கப்படுகிறான். ஆயிரக்கணக்கான மக்கள் ராமனையும் கிருஷ்ணனையும் சரித்திர பாத்திரங்களாகவே நம்பி, இறைவன் அவதாரபுருஷர்களாகிய அவர்களை வழிபட்டால் உண்மை மோட்சம் அடையலாம் என்று எண்ணுகிறார்கள். சரித்திரம், கற்பனை, உண்மை ஆய இம்மூன்றும் பிரிக்கமுடியாதனவாகச் சேர்ந்துவிட்டன. இறைவனுக்குக் கொடுக்கப்பட்ட பல்வேறு நாமங்களையும் ரூபங்களையும் பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரண ராமனைக் குறிப்பனவாக எடுத்துக்கொண்டேன். ஆகவே சர்வவல்லமையுடைய எதன் நாமத்தை இருதயத்தில் எண்ணியபொழுது சகல விக்கினங்களும் நாசமடைகின்றனவோ அதனையே தசரதன் மைந்தன் என்றும் சீதாபதியென்றும் வர்ணிக்கிறார்கள் எனயான் எடுத்துள்ளேன்.



# செய்தித் திரட்டு.

---(-)---

## ஸ்ரீ சுவாமி சிவானந்தரின் இலங்கை விஜயம்.

இமயமலைச் சாரலிலுள்ள ரிஷிகேஷம் என்னும் புனித இடத்தில் ஆச்சிரமம் நிறுவி, சென்ற பதினைந்து ஆண்டுகளாக உலகின் நாற்றிசைகளிலும், ஆத்மஞானத்தைப் பரப்பிக்கொண்டுவரும் ஸ்ரீ சிவானந்தர் அவர்கள் தம் நாட்டுமக்களின் நன்மையைக் கோரி 3-9-50 சனிக்கிழமையன்று ஓர் அகிலஇந்தியயாத்திரையை ஆரம்பிக்கின்றார். அத்தொடர்பில் அக்ரோபர் மாசம் 12-ந் தேதி வியாழக்கிழமை கொழும்புக்கு விஜயஞ்செய்து அடுத்தநாள் திரும்புவதற்கு அவர் உடன்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம். உலகப்போற்றும் இம்மகானை நேரிற்கண்டு அவரின் ஆசியைப் பெறுவதற்கு இலங்கைவாழ் இந்துக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைக்கப்போகின்றது. ஏனையவிபரங்கள் தேவைப்படுவோர் ஸ்ரீ சிவானந்தர் வரவேற்புக்கழகக் காரியதரிசிக்கு எழுதிக்கொள்ளலாம். அன்னாரின் விலாசம், நிர். 60, டீல் பிளேஸ், கொழும்பு. 3 (60, Deal Place, Colombo 3) அடுத்த 'ஆத்மஜோதி'யிலும் விபரங்கள் வெளிவரும்.

## திருக்கேதீச்சரத்தில் சங்காபிஷேகம்.

வழக்கம்போல் இந்த ஆண்டு ஆனி மாசம் நடந்த சங்காபிஷேகத்தைத் தரிசிக்க இலங்கையின் பலபாகங்களிலுமிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்தனர். இதற்குமுன் இவ்வித பெருங்கூட்டம் வரவில்லையென்பதே பலரின் அபிப்பிராயம். புதைபொருள் ஆராய்ச்சிக்காரரால் கண்டுபிடிக்கப்பட்ட பழைய தீர்த்தங்கள், கோயில்கள், வீதிகள் அற்புதக்காட்சியளித்தன. மக்களின் உள்ளத்தில் பெரிய உணர்ச்சியை உண்டாக்கியுள்ள இப்பழைய நிலையின் சின்னங்கள் திருப்பணிச்சபையாரின் தொண்டுக்கு நல்ல ஆதரவு அளிக்கும்படி மக்களைத்தூண்டச்செய்யுமென நிச்சயமாகக் கூறலாம்.

## கூட்டுவழிபாடு.

வெள்ளவத்தை ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் 4-7-50 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டுவழிபாடு ரேடியோவில் அஞ்சல் செய்யப்பட்டது.

## அன்புநெறி கொண்டும்மை அழைக்கின்றோமே.

———:———

வெண்பா,

மண்டு கலைமலிந்து மாண்புகள் பற்பலவாப்
பண்டு படைத்த பழம்பெருமை — கொண்டசிவ
னெந்தை திருப்பணிக ளின்பமுட னேபுரிவீர்
சிந்தை மகிழ்ந்து தினம்,

விருத்தம்.

1 மூன்னாளில் சுந்தரர்சம் பந்தர் நம்மால்
முதற்பாடல் பெற்றதிருப் பெருமை யோடு
விண்ணாட்டு விஸ்வகன்மா மயனும் பூவில்
விளங்குமண் டோதரியீ ருகப் பல்லோர்
எந்நாளும பூசித்துப் பலனுங் கண்ட
ஈழத்துத் திருக்கேதீச் சரத்தெம் பெம்மான்
இந்நாளில் ஏனென்றுங் கேட்பா ரின்றி
இருப்பதுவும் எம்பண்புக் கேற்ற தாமோ?

2 நிறைந்தபுகழ் நனிசெறியந் நாளில் மன்னர்
நிதிகுவித்துக் கைதொழுது நிமிர்த்திச் சீரும்
சிறந்தடியார் வழிபாட்டின் பெருமை தேங்கித்
திருவருளைச் சுரந்தளித்த தெய்வத் தானம்
குறைந்தருமை கொடிசெடிகள் சூழ்ந்து காடும்
குடிகொண்டு அழகழிந்து பெருமை குன்றி
மறைந்துகிடக் கின்றதிருச் சந்நி தானம்
மறுபடியும் மலர்ச்சிபெறச் செய்வோம் வாரீர்!

(தமிழ்வேள்)

---

முற்பக்கத் தொடர்ச்சி.

### குருநாக்கல் சைவமகாசபை.

18-6-50 ஷ சபையின் 20-ம் ஆண்டு நிறைவுவிழா செவ்வனே கொண்டாடப்பட்டது. பல அறிவாளிகளின் சமையப் பிரசங்கங்கள் நடைபெற்றன.

### தெல்லிப்பழை பாலர் ஞானோதயசபை.

ஷ சபையாதரவில் 20-6-50 புதன்கிழமை மாணிக்கவாசகர் குருபூசைவிழா வெகுசிறப்பாகக் கொண்டாடப்பெற்றது,




## ஆயுள்சந்தா ஆதரவாளர்கள்.

1 திரு. எஸ். தொண்டமான் M. P.
வேவென்டன் எஸ்ரேற், றம்பொடை

2 திரு. எம். ஜெயராம், குயின்ஸ்பரி எஸ்ரேற், ஹொற்மலி.

3 திரு. என். நடராசன், 31, திருக்கோணமலை வீதி, கண்டி.

## மார்க்கபந்து.

——:-;——

ஸன்மார்க்க பந்துவாக விளங்கும் வாரப் பத்திரிகை.

சனிக்கிழமைதோறும் வெளிவரும்.

சந்தா விபரம்.

வருஷம் ரூ. 10/- ஆயுள் ரூ. 100/-
போஷகர் ரூ. 200/-

130, பெரியதெரு, திருவல்லிக் கேணி,
சென்னை.



## ஆத்மஜோதி.

(ஓர் ஆத்மீக மாதவெளியீடு)

கௌரவ ஆசிரியர்:
க. இராமச்சந்திரன்.

பதிப்பாசிரியர்:
நா. முத்தையா,

சந்தா விபரம்:
ஒருவருடம் ரூ. 3/- ஆயுள் சந்தா ரூ. 75/-
தனிப்பிரதி சதம் 30.

"ஆத்மஜோதி" நிலையம்,
நாவலப்பிட்டி. (சிலோன்).

Registered at the G. P. O. as a News Paper,


# புதுயுக நிலையம், புதுச்சேரி.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

ஆத்மீக சாதகர்களுக்கு இரு பொக்கிஷங்கள்.

## சுவாமி சுத்தானந்த பாரதியாரின்

தவத்தில் அரும்பிய இருமலர்கள்.

## — அருட்செல்வம் —

தமிழர்களுக்கு 'பைபிள்' போன்றது. பாடசாலைகளிலும் வீடுகளிலும் மாணவர்க்கும் வயது முதிர்ந்தோருக்கும் நித்திய பாராயணத்திற்கு ஏற்றது. கூட்டு வழிபாடு நடத்துவோருக்கு ஏற்றபாடல்கள். ஆத்மீகப் பேச்சாளர் எடுத்துக்கையாளக்கூடிய அருமையான பாசுரங்கள்.

விலை ரூபா **2/-** மாத்திரமே.

இலங்கை அன்பர்கள் 12 பேர் ஒன்றுசேர்ந்து எழுதினால் V. P மூலம் வந்துசேர ஒருபுத்தகம் 2 ரூபாய் ஆகின்றது. தனித்தனி V. P. மூலம் பெறுவதாயின் 3 ரூபாவுக்குக் கிட்டவரும். சமூக முன்னேற்றச் சபைகள், சங்கங்கள் V. P. மூலம் தொகையாக எடுத்து உரியவிலைப்படி அன்பர்களுக்கு வழங்கலாம்.

## — — ஆத்ம சோதனை. — —

சு த் தா ன ந் த ரி ன் அ னு ப வ ங் க ள் .

விலை ரூபா **5/-**

தமிழுலகம் ஆவலாக எதிர்பார்த்த "ஆத்மசோதனை" வெளிவந்துவிட்டது. 500 பக்கங்கள் கொண்ட அழகிய நூல். சுவாமிகளின் பிறந்தநாளாகிய மே மாதம் 11-ந் திகதி திருவிழா நடத்தி சுத்த சங்கம்சுவாமிகளுக்கு அளித்தது. சுவாமிகளின் நூல்களையும் கொள்கைகளையும் பரப்பவே சுத்தசங்கம்சென்னையில் உருவாகிறது. ஆத்மசோதனை வேண்டுவோர் : சுத்த சங்கம், வான்காடுபில்டிங், 2 லேன் பீச், மதருஸ் என்ற விலாசத்திற்கு, அல்லது புதுச்சேரி 'புதுயுக' நிலையத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.


கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன், பதிப்பாசிரியர்: நா. முத்தையா
'ஆத்மஜோதி' நிலையம், நாவலப்பிட்டி. (சிலோன்)
நாவலப்பிட்டி, சரவண பிரஸில் பதிப்பித்தது 16-7-50